இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in | நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி | murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 83 – ஒலி : 300 – திருவள்ளுவர் ஆண்டு 2056 – வைகாசி 27 – செவ்வாய்க்கிழமை 10 ஜூன் 2025 – சென்னை 16 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 83 - Issue 300 : Thiruvalluvar Year - 2056 - Vaikasi 27 - Tuesday 10 June 2025 - Chennai 16 Pages ₹ 5.00

### சட்டப்பேரவை அறிவிப்புகள் தொடர்பாக

# முதல்வர் மு.க.ஸ்டாலின் துறை வாரியாக ஆய்வு!



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று (9.6.2025) தலைமைச் செயலகத்தில், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை மற்றும் பொதுப்பணித்துறை ஆகிய துறைகளின் சார்பில் சட்டப்பேரவையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள் குறித்த ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ.வேலு, தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், பொதுப்பணித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் மங்கத் ராம் சர்மா, நிதித்துறை முதன்மைச் செயலாளர் த. உதயச்சந்திரன், பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகத்தின் முதன்மைச் செயலாளர் – தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் (முழு கூடுதல் பொறுப்பு) தி.ந. வெங்கடேஷ், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை செயலாளர் மரு. ஆர். செல்வராஜ், சென்னை கன்னியாகுமரி தொழில்தடத் திட்ட இயக்குநர் தெ. பாஸ்கர பாண்டியன், அரசு உயர் அலுவலர்கள் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

## துணை முதல்வர் – அமைச்சர்கள் பங்கேற்றனர்!

**சென்னை, ஜூன் 10 - சட்டப்பேரவையில் அறிவிக்கப்பட்ட மக்கள் நலத்திட்டங்களின் செயல்பாடுகள் குறித்து அமைச்சர்கள் மற்றும் அதிகாரிகளுடன் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் ஆலோசனை மேற்கொண்டார்.**

தமிழ்நாட்டின் மக்களின் நலனுக்காக பல்வேறு திட்டங்களை திராவிட மாடல் அரசு நிறைவேற்றி வருகிறது. அரசு அறிவிக்கும் திட்டங்கள் மக்களை சென்றடைகிறதா என்பது குறித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தொடர்ச்சியாக ஆலோசனை நடத்தி வருகிறார்.

இந்நிலையில் சட்டப்பேரவையில் பொதுப் பணித்துறை சார்பில் அறிவிக்கப்பட்ட திட்டங்கள் குறித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆலோசனை மேற்கொண்டார்.

**அமைச்சர்கள் பங்கேற்பு!**

இந்த ஆலோசனை கூட்டத்தில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பங்கேற்றார். பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ.வேலு, தலைமைச் செயலாளர் முருகானந்தம், பொதுப்பணித் துறை அதிகாரிகள் ஆய்வு கூட்டத்தில் பங்கேற்று அறிவிக்கப்பட்ட திட்டங்களின் செயல்பாடுகள் குறித்து எடுத்துரைத்தனர்.

**அதிகாரிகள் கலந்து கொண்டனர்!**

ஆய்வுக்கூட்டத்தில் பொதுப் பணித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் மங்கத் ராம் சர்மா, நிதித்துறை முதன்மைச் செயலாளர் உதயச்சந்திரன், பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகத்தின் முதன்மைச் செயலாளர் வெங்கடேஷ், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை செயலாளர் செல்வராஜ், சென்னை கன்னியாகுமரி தொழில்தடத் திட்ட இயக்குநர் பாஸ்கர பாண்டியன், அரசு உயர் அதிகாரிகள் மற்றும் துறை சார்ந்த அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

**உணவு - கூட்டுறவுத் துறைகள் ஆய்வு!**

இதைத் தொடர்ந்து கூட்டுறவுத்துறை அறிவிப்புகளின் செயல்பாடுகள் குறித்து முதலமைச்சர் ஆய்வு நடத்தினார். இதில் அமைச்சர் பெரிய கருப்பன் மற்றும் அதிகாரிகள் பங்கேற்றனர். இதைப்போல் உணவுத்துறை ஆய்வு கூட்டத்தில் அமைச்சர் சக்கரபாணி மற்றும் அதிகாரிகள் கலந்து கொண்டு பேரவையில் அறிவிக்கப்பட்ட திட்டங்களின் செயல்பாடு குறித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு எடுத்துரைத்தனர்.

**எரிசக்தித் துறை!**

சட்டப்பேரவையில் எரிசக்தி துறை சார்பில் நடைபெற்று வரும் திட்டப்பணிகள் குறித்தும் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் ஆய்வு மேற்கொண்டார். இந்த ஆய்வுக்கூட்டத்தில் அமைச்சர் எஸ். எஸ்.சிவசங்கர் மற்றும் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

### தேனாம்பேட்டை - சைதாப்பேட்டை இடையே

## உயர்மட்ட மேம்பால பணிகள் தீவிரம்!

### அமைச்சர் எ.வ.வேலு உத்தரவுப்படி அதிகாரிகள் நடவடிக்கை!

சென்னை, ஜூன் 10 – தேனாம்பேட்டை – சைதாப் பேட்டை இடையே 3.20 கி.மீ. தூரத்திற்கு நான்கு வழித்தட உயர்மட்ட சாலை அமைக்கும் பணிகள் விறுவிறுப்பாக நடைபெற்று வருகிறது.

சென்னையில் வாகனப் பெருக்கத்தால் சாலையில் ஏற்படும் நெரிசலுக்கு தீர்வு காணும் வகையில்,திராவிட மாடல் அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. அதன் ஒரு பகுதியாக, அண்ணா சாலையில் போக்குவரத்து நெரிசலுக்கு தீர்வுகாணும் வகையில் தேனாம்பேட்டையிலிருந்து சைதாப்பேட்டை வரை உயர்மட்ட மேம்பாலம் அமைக்கப்படுகிறது. எல்டாம்ஸ் சாலை, செனடாப் சாலை, நந்தனம், சிஐடி நகர் உள்ளிட்ட 7 முக்கிய சந்திப்புகளை இணைக்கும் வகையில் 3 புள்ளி 2 கிலோ மீட்டருக்கு நான்கு வழித்தட உயர்மட்ட சாலை அமைக்கும் பணி,விறுவிறுப்புடன் நடைபெற்று வருகிறது.

அண்ணா சாலையின் கீழே சென்னை மெட்ரோ இரயிலின் சுரங்க பாதை செல்வதனால், உயர் மட்ட சாலையிலிருந்து வரும் அழுத்தம், சாலையின் கீழே தற்போது இயங்கி வரும் சென்னை மெட்ரோ இரயில் சுரங்கப்பாதைகளை சிறிதளவும் பாதிக்காத வண்ணம் மண்ணின் தாங்கு திறனை நவீன தொழில் நுட்பத்தை கொண்டு மேம்படுத்தி அடித்தளம் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகிறது.

இத்திட்டத்திற்காக மொத்தம் 135 தூண்கள் அமைக்கப்பட உள்ளன. இந்த உயர்மட்ட மேம்பாலம் பயன்பாட்டிற்கு வரும் போது, தேனாம்பேட்டை முதல் சைதாப்பேட்டை வரையிலான மூன்றரை கிலோ மீட்டர் தூரத்தை 3 முதல் 5 நிமிடத்தில் வாகன ஓட்டிகளால் கடந்து செல்ல முடியும் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்தப் பணிகளை தீவிரப்படுத்த நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் எ.வ.வேலு அவர்கள் உத்தரவிட்டிருந்தபடி அதிகாரிகள் பணிகளை தீவிரப் படுத்தியுள்ளனர்.

### திராவிட இயக்கச் சித்தாந்தம் இருக்கும் வரை – எத்தனை சித்து விளையாட்டுக்களை நடத்தினாலும்

# அமித்ஷாவின் பிளவுவாத அரசியல் தமிழ்நாட்டில் எடுபடாது!

## கழகத் துணைப் பொதுச் செயலாளர் ஆ.இராசா எம்.பி. காட்டமான பதில்!

**சென்னை, ஜூன் 10 - "திராவிட இயக்கச் சித்தாந்தம் இருக்கும் வரை, எத்தனை சித்து விளையாட்டுகளை நடத்தினாலும் அமித்ஷாவின் பிளவுவாத அரசியல் தமிழ்நாட்டில் எடுபடாது" என்று கழகத் துணைப் பொதுச் செயலாளர் ஆ.இராசா எம்.பி. செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டியில் காட்டமாக தெரிவித்துள்ளார்.**

தி.மு.கழக துணைப் பொதுச்செயலாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான ஆ. ராசா நேற்று காலையில் செய்தியாளர்களைச் சந்தித்து உரையாடினார். அப்போது அவர் அளித்த பேட்டி வருமாறு :-

நேற்றைய தினம் ஒன்றிய உள்துறை அமைச்சர் அமித்ஷா அவர்கள் மதுரையில் பேசிய பேச்சை அனைவரும் அறிவோம். நாட்டின் உள்துறை அமைச்சர் என்ற தகுதியை மறந்து, அவர் பேசியதை சுருக்கி சொல்ல வேண்டும் என்றால், அப்பட்டமான பொய், அறுவருப்பான வஞ்சகம், பிளவு நோக்கம் கொண்ட சூதுரை. இந்த மூன்றையும் தவிர அவரின் பேச்சில் என்னால் எதுவும் கண்டுபிடிக்க முடியவில்லை.

**பா.ஜ.க.வின் கீழ்த்தரமான நடவடிக்கை!**

நாட்டின் உள்துறை அமைச்சர் ஒரு மாநிலத்திற்கு வரும் போது, அவருக்கு இருக்கும் தகுதி, பொறுப்பு, கடமை உணர்ச்சி ஆகியவற்றை கிஞ்சிற்றும் கவலைகொள்ளாமல், அவதூறுகளை அள்ளி வீசுவதும்; மாற்றுக் கட்சி ஆட்சி அந்த மாநிலத்தில் நடந்தால், ஆதாரம் இல்லாத குற்றச்சாட்டுகளை சொல்வதும், மதவாத பிளவை வேண்டுமென்றே உருவாக்கி, அமைதியாக இருக்கும் மாநிலத்தில் சட்டம் ஒழுங்கு பிரச்சினையை ஏற்படுத்தி, கலவரத்தை தூண்டி, அதன் மூலம் அரசியல் ஆதாயத்தை பெறமுடியுமா என்ற



அருவருப்பான உணர்ச்சிதான் அவருடைய பேச்சில் வெளிப்பட்டுள்ளது. இது கூட்டாட்சித் தத்துவத்திற்கு அழகல்ல. மாநில ஒன்றிய அரசிற்கு இடையே இருக்கும் சுமுக உறவிற்கு குந்தகம் விளைவிக்கும் பேச்சை அவர் பேசியுள்ளார்.

அவர் பேச்சை ஒவ்வொரு வரியாக ஆதாரத்தோடு எங்களால் பொய் என நிரூபிக்க முடியும். தமிழ்நாடு அமைதிப் பூங்காவாக இருப்பதை, பா.ஜ.க. விரும்பாமல், அரசியலுக்காக மிகவும் கீழ்த்தரமான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ள அமித்ஷாவின் பேச்சை - போக்கை ஒரு போதும் தமிழ்நாட்டு மக்கள் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள்.

**அமித்ஷா வகிக்கும் பதவிக்கு அழகல்ல!**

முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாட்டில் சட்டம் ஒழுங்கு அமைதி, வளர்ச்சி திட்டங்கள், ஒன்றிய அரசின் நிதி பல நேரங்களில் கிடைக்காவிட்டாலும் மாநில அரசின் நிதியை கொடுத்து வளர்ச்சி திட்டப்பணிகள் தடைபடாமல் விரைவாக வழங்கி நடைமுறைப்படுத்துவதைப் பொறுத்துக்கொள்ள முடியாத ஒன்றிய அரசும், பா.ஜ.க. கட்சியும், அமித்ஷாவை வரவைத்து இப்படி ஒரு கேலிக்கூத்தான, அருவருப்பான அரசியல் நாகரிகத்திற்குப் புறம்பான காரியத்தை அரங்கேற்றியுள்ளார்கள். அமித் ஷா என்ற தனிநபருக்கு மட்டும் அல்ல, அவர் வகிக்கும் பதவிக்கும் இது அழகல்ல. இந்த அரசியல் சித்து விளையாட்டுகளை அவர் இத்துடன் நிறுத்திக்கொள்வது நல்லது.

இவ்வாறு குறிப்பிட்ட ஆ.ராசா தொடர்ந்து செய்தியாளர்களுக்கு பேட்டி அளித்தார். அது வருமாறு:-

**கேள்வி:** பா.ஜ.க. அரசாங்கம் அதிகமாக நிதி ஒதுக்கியிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளதே?

**பதில்:** மன்மோகன் சிங் ஆட்சிக்காலத்தில் நேரடி நிதி வருவாய் எவ்வளவு? தற்போது எவ்வளவு? நான்கு மடங்கு நேரடி நிதி வருவாய் உயர்ந்துள்ளது. மன்மோகன் சிங் ஆட்சிக்காலத்துடன் ஒப்பிட்டால் தமிழ்நாட்டிற்கு பா.ஜ.க. கொடுக்கும் நிதி மிகக் குறைவாகவே உள்ளது.

தொடர்ச்சி 3ஆம் பக்கம்